மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கேள்வி கிராமப் புறத்தில் ஒழுக்கக் கண்காணிப்பு குழு அமைப்பதைப் பற்றியதாகும். நகரங்களில் ஒழுக்கப் பணியைப் பாதுகாக்க வேறு வசதிகள் இருக்கின்றன.

Teachers Training.

*43 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to restrict the admission in training schools in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1972–73-ம் ஆண்டிற்கு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில், முதல் வருடப் பிரிவுகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

*44 வினா—திரு. பி. எஸ். மணியன் : கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், துவக்குவதற்கு அனுமதி கொடுப்பது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புதியதாகப் பயிற்சி நிறுவனங்களைத் துவக்குவதற்கு தற்சமயம் அவசியம் இல்லையாதலால் அனுமதி அளிக்கப்படுவது இல்லை.

திரு பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சி தேறியவர்கள் அனைவருக்குமே வேலை கொடுக்கும் வரை இந்தப் பயிற்சி வகுப்புகள் துவக்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா அல்லது எத்தனை காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஆண்டு மட்டும் தான் (அதாவது 1972–73) முதல் வகுப்பிலே பயிற்சி மாணவர்கள் சேர்ப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு எந்த முறை கையாளப்பட வேண்டுமென்று இனிமேல்தான் கவனிக்க வேண்டும். சில பயிற்சிப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றினால் நல்லது என்று யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில பயிற்சிப் பள்ளிகளை ஒன்றோடொன்று இணைப்பதும் நல்லது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இது பற்றி கலந்து ஆலோசித்து தக்கதொரு முடிவு எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, admission to Secondary Training Schools have been stopped this year in our State. May I know from the Hon. Minister for Education whether there will be admissions to these schools at least from next year ?